1972 மார்ச் 4]

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, அந்தந்த மாவட்டங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்கள் விளையாட்டுக் குழுவின் ஆதிக்கத்தில் உள்ளனவா அல்லது நகர மன்றங்களின் ஆதிக்கத்தில் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விளையாட்டு அரங்கங்கள் மாவட்ட விளையாட்டுக்குழுவின் பராமரிப்பில் இருக்கின்றன. அந்தக் குழுவில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மாவட்டக் குழுவின் தலைவர் மத்தியக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார். மத்திய குழு அரசாங்கத்திடம் நிதி பெற்று, மாவட்டக் குழுக்களுக்கு கொடுக்கிறது. மாவட்டக் குழுவின் தேவைகளை வலியுறுத்தினால், அதற்கு வேண்டிய பொறுப்பை மத்தியக் குழு பரிசீலிக்கிறது. ஆக, அரசு உதவி செய்தபோதிலும், பராமரிப்புப் பணியையும், நிர்வகிக்கும் பொறுப்பையும் மாவட்டக் குழுக்களே செய்துவருகின்றன.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே நம்முடைய பழம் பெரும் விளையாட்டுகளாகிய சிலம்பம், குத்துச்சண்டை. மல் யுத்தம் போன்ற வீர விளையாட்டுகளுக்கும் விளையாட்டு அரங்கங்களில் வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சில இடங்களில் இம்மாதிரி விளையாட்டுக்களுக்கும் வசதி செய்திருக்கிறார்கள். ஆனால், அது அந்தந்த மாவட்டக் குழுவின் வசதியையும், இடவசதியையும் பொறுத்தது.

கிளை நூலகங்கள்

* 298 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிளை நூலகங்களில் உள்ள சந்தாதாரர்கள் முக்கியத்துவம் வாய்ந்த நூல்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்க முடியாமல் நூலகத்திலேயே படிக்க வேண்டுமென அரசு சுற்றறிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்நூல்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்க ஏற்பாடு செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

[1972 மார்ச் 4

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இப்பொருள், அந்தந்த நூலக ஆணைக்குழுவின் அதிகார வரம்பிற்குள் உள்ளதால், அரசு இதைப்பற்றி சுற்றறிக்கை ஏதும் அனுப்ப உத்தேசம் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நடமாடும் நூலகங்கள் எந்தெந்த மாவட்டங்களில் இயங்கி வருகின்றன என்பதையும் அவை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முழு விபரக் குறிப்பும் இப்போது இல்லை. ஆனால் சென்னை நகரிலும், கோவையிலும் நடமாடும் நூலகங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. வேறு சில மாவட்டங்களிலும் இருக்கின்றன. எல்லா இடங்களிலும் நடமாடும் நூலகங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : சேலம் மாவட்டத்தில் இருந்து தர்மபுரி தனி மாவட்டமாகப் பிரிந்த பிறகு இன்னும் அந்த மாவட்டத்திற்கு என்று தனியாக நூலக ஆணைக்குழு செயல்படவில்லை. தர்மபுரிக்கு என்று தனி நூலக ஆணைக்குழுவை உடனடியாக ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சேலம். தர்மபுரி இரண்டும் ஒன்றாக இருந்தபோது ஒரு நூலக ஆணைக்குழு இருந்தது. தர்மபுரி தனி மாவட்டமாக ஆனபிறகு தர்மபுரிக்கென்று ஒரு தனி நூலக ஆணைக் குழு அமைக்கப்படுவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தக் கிளை நூலகங்களில் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் வெளியான புத்தகங்கள் அனைத்தும் வாங்கப்படவேண்டும் என்கிறபோது அதற்கான நிதிவசதி இல்லை என்பதாக மத்திய ஆணைக்குழு தெரிவிக்கிறது. இந்த நிதி வசதியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு குறைந்தபட்சம் 25 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உள்ள கோயில்கள் இருக்கும் ஊர்களில் எல்லாம் நூலகங்கள் அமைக்க எதிர்காலத்தில் ஒரு திட்டத்தை அரசாங்கம் தயாரிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

1972 மார்ச் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே இப்போது மாவட்ட நூலகக் குழுக்களுக்கு எல்லாம் போதுமான நிதிவசதி இல்லை என்பது உண்மைதான். நூலகங்களின் எண்ணிக்கை அதிகப்பட்டிருப்பதனால் நிர்வாகச் செலவுகள் அதிகரித்துள்ளன. எல்லாப் புத்தகங்களையும் வாங்க போதுமான நிதிவசதி இல்லை. நிதி வசதியைப் பெருக்கவேண்டும் என்பதற்காக அண்மையில் கொடைக்கானலில் கூடிய நூலக ஆணைக்குழுத் தலைவர்கள் மகாநாட்டில் கூட—இப்போது லைப்ரரி செஸ் என்று 3 பைசா வசூலிக்கப்படுகிறது—அரசாங்கம் 3 பைசா கொடுக்கிறது —இதற்கு மாற்றாக செஸ் 5 பைசா என்று வசூலித்தால் அரசும் ஈட்டுமானியமாக 5 பைசா உயர்த்தும்—ஆகவே 5 பைசா அளவுக்கு செஸ்ஸை உயர்த்தவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். அரசு அதற்கான நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் நூலகக் குழுவின் சார்பாக 2 ஆண்டுகாலமாக புதிய நூலகங்கள் திறக்கப்படவேண்டும் என்று தீர்மானம் போட்டு வந்திருக்கிறார்கள். போதுமான நிதிவசதி இல்லை என்ற காரணத்தினால் அது இரண்டாண்டாக ஒத்திவைக்கப்பட்டு வந்திருக்கிறது. கிராம, ஊராட்சிகளில் இடவசதியும் வேறுபல வசதிகளும் செய்துதர பலர் முன்வந்திருக்கிற காரணத்தினால் இவ்வாண்டாவது வடாற்காடு மாவட்டத்தில் புதிய நூலகங்கள் திறக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதிவசதி இல்லாத காரணத்தினால்தான் அந்த முயற்சி ஒத்திவைக்கப்பட்டது. நிதிவசதி பெருகுகிற நேரத்தில் அந்த முயற்சி வெற்றிபெறும்.

திரு. எஸ். வடிவேல் : இப்போது நூலகங்கள் நகர்ப்புறங்களில் இருக்கின்றன. அவை கிராம மக்களுக்கும் பயன்படுகிற வகையில் கிராமப்புறங்களிலும் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எல்லா நூலகங்களும் நகர்பபுறங்களிலேயே இருக்கின்றன என்று சொல்வதற்கில்லை. கிராமப்புறங்களிலும் வைக்கப்படுகின்றன. நூலகங்கள் இல்லாத கிராமங்களில் சென்று கொடுத்து—வாங்கி வருகிற வழங்கு நூலகங்களும் வைக்கப்படுகின்றன. இதைத்தவிர இயங்கு நூலகங்கள் என்று அங்கங்கே சென்று வருகிற அமைப்பும் இப்போது இருந்து வருகிறது.